# குருதேவர்

இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை — 49

## இ. ம. இயின். பயிற்சி முகாம்

திருவரங்கம் (திருச்சி) மார்ச் **4, 5, 6, (1988)**

**கற்றலும் கற்பித்தலும்**



## முதலாம் பயிற்சி முகாம் சிறப்பு மலர்

போன்: 619994

காணிக்கை: ரூ. 2-50

# பயிற்சி முகாமின் வெற்றிச் செய்தி

நமது இயக்கத்தவர்கள், அருளாட்சி அமைப்புப்பணி எப்படியெப்படி நடந்து கொண்டிருக்கின்றது?; இதில் யார்யார் காலப்போக்கில் பங்கு பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்?; அருளாட்சி நாயகம் இரவு பகலாக அயராது முயன்று என்னென்ன போதனை வழங்குகின்றார்? என்னென்ன சாதனைகள் செய்கின்றார்?; இந்த அருளாட்சி அமைப்புப் பணியில் பொருளுலகத்தவர்கள் எப்படியெல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கின்றார்கள்?; அப்படித் தயாரிக்கப்பட்டவர்கள் எல்லாம் ஏன் ஒரே பெருங்கூட்டமாக ஒரு முறை கூட இணைக்கப்படாமல் உலகெங்கும் தனித்தனியாகவே பிரித்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்?; உலகெங்குமுள்ள அருளுலகத்தவர்களை இணைத்து நாடு, மொழி. இனம், மதம்... முதலிய வேறுபாடுகளையெல்லாம் கடந்து அருளாட்சி நாயகம் செயல்படத் துவங்கி நெடுங்காலம் ஆகியும் நமது **'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'**ஏன் **'ஓர் உலகப் பேரியக்கமாக'** அறிமுகப்படுத்தப்படவில்லை?; இமயம் முதல் குமரி வரை இந்துமதத்தில் உள்ள அருளூற்றுக்களும், அருளாளர்களும் ஏறத்தாழ 'இந்துமதத் தந்தை', 'குவலய குருபீடம்', அருளாட்சி நாயகம்', குருமகா சன்னிதானம்', 'ஞானாச்சாரியார்', 'ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்', 'பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியுடன் முழுமையாக இரண்டறக் கலந்துவிட்ட பிறகும் கூட ஏன் அருளாட்சி அமைப்புப்பணி இன்னும் இலைமறை காயாகவே இருக்கின்றது?; நமது இயக்கத்தில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் நமது குருதேவரை 'எல்லாம் வல்லசித்தர்' என்று புரிந்து விரும்பி நம்பியேற்றுக் கொண்டும் கூட குருதேவர் மட்டும் ஏன் தமது எல்லா வல்லமைகளையும் செலுத்திச் செயல்பட்டிடக் காலதாமதம் செய்கின்றார்?... என்பன போன்ற எல்லா விதமான கேள்விகளுக்கும் ஏறத்தாழ எல்லோருமே எட்டறிவாலும் பட்டறிவாலும் புரிந்து கொள்ளும் அளவிற்கு எண்ணற்ற சான்றுகளையும், ஊன்றுகளையும் வழங்குவதற்குரிய பல திட்டங்களை வழங்குவதுதான் இந்தப்பயிற்சி முகாம். எனவே தான், 'பயிற்சி முகாமில் சொல்லாமல் விடப்பட்டவைகள்' என்ற தலைப்பில் வெளியிடப்படும் குறிப்புக்களில் இந்தக் குறிப்பும் ஒன்றாகவிளங்குகின்றது.

சுருக்க விளக்கமாக நமது குருதேவர் வாங்கியுள்ள அருட்பட்டங்கள் அனைத்தையும் இங்கு பட்டியலிட்டுக்காட்ட விரும்புகின்றோம். ஆனால், சென்ற ஆண்டு குருகுல வைகாசித் திங்கள் பால்குடவிழாவின் [பிறவாக ஆண்டு வைகாசித் திங்கள் 26-ம் தேதி செவ்வாய்க்கிழமை முழு நிலவு நாளில் மதுரை மாவட்ட மேலூர் வட்ட கொட்டாம்பட்டிக்கருகில் உள்ள காரியேந்தல்பட்டி சித்தர் மாநகரில் நடைபெற்றது] அழைப்பிதழில் ஏற்கனவே அனைத்துப் பட்டப் பெயர்களும் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளது அதனையே அனைவரும் பார்த்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

குறிப்பு: பூசையில் கட்டாயமாகப் பயன்படுத்தப்பட வேண்டிய குருதேவரின் அருட்பட்டங்கள் பயிற்சி முகாமில் வழங்கப்பட்ட குருதேவரின் வண்ணப்படத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

குருதேவர் தாம் வாங்கியுள்ள ஒவ்வொரு அருட்பட்டத்தையும் மிகப்பெரிய, அரிய, சீரிய, கூரிய, நேரிய முயற்சிகளை அயர்ச்சியின்றியும் தளர்ச்சியின்றியும் தொடர்ச்சியாகச் செய்து தான் பெற்றிட்டார். அதுவும் அருளுலகத்தவர்களே குருதேவரின் முயற்சி முதிர்ச்சி பெற்றுவிட்டது, தேர்ச்சி பெற்றுவிட்டது என்று முடிவு கட்டித் தாங்களாக முன்வந்து வழங்கியவைதான் இந்த அருட்பட்டங்கள் இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நமது குருதேவர் எந்த அருட்பட்டத்தைப் பெற்றாலும் அதற்குரிய பயிற்சிகளையும் முயற்சிகளையும் நெடுங்காலம் தொடர்ச்சியாகச் செய்து, தம்மை முழுமையாக அந்த அருட்பட்டத்துக்குரிய தகுதிகளுக்கெல்லாம் உரியவராக ஆக்கிக் கொள்வதுதான் வழக்கம்.

---

1988-ஆம் ஆண்டிற்கான குருதேவர் சந்தா ரூ 36/- செலுத்திவிட்டீர்களா?

குறிப்பு: அதாவது, நமது குருதேவர் இதுவரையில் பெற்று முடித்துள்ள பட்டங்கள் ஏறத்தாழ நூறு என்ற எண்ணிக்கையை அடையும் நிலையில் உள்ளன. ஒவ்வொரு பட்டத்திற்கும் மிகத்தெளிவான, முறையான, விளக்கமான, நிறைவான வரலாறு, காலக்கணக்கீட்டு அடிப்படையிலும் சரியான நேரக்குறிப்போடும் இருக்கின்றது. அப்படிப் பார்த்தால் குருதேவருக்காகவே நூறு தனி வரலாறுகள் இருக்கின்றன. அவற்றின் விரிவஞ்சி மிகப்பெரிய புகழ்பெற்ற கட்டுரைகளாக ஏற்கனவே வெளிவந்துள்ள வரலாறுகளையெல்லாம் இக்கட்டுரையில் குறிப்பிடாது ,விட்டுவிடுகிறோம். அவற்றை நம்மவர்கள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களிடம் கேட்டுத் தெரிந்துக் கொள்ள வேண்டும்; முடிந்தால் அவற்றிற்குத் தத்தம் கைப்பட நகல்கள் பலவற்றைத் தயாரித்துத் தமது கோப்பிலும், தாமறிந்த புதியவர்களின் கோப்புக் களிலும் இடம் பெறச் செய்ய வேண்டும் -குருவாணை இதுபோல் அருளாட்சி அமைப்புப்பணியிலும், அருட் போரிலும் வரலாற்றுப் புகழ்மிக்க நிகழ்ச்சிகளைப்பற்றிய கட்டுரைகளின் நகல்களை ஒவ்வொருவரும் தேடியலைந்து பெற்று அவரவர் கைப்படப் பல நகல்கள் எழுதித் தங்களின் கோப்பிலும், தாங்களறிந்த பிறரின் கோப்புக்களிலும் இடம் பெறச் செய்தல் வேண்டும். அவையே அருட்போருக்கு உதவக் கூடிய போராயுதங்கள், பெரிய சாதனங்கள் என்பதை எல்லோரும் நினைவிற் கொள்ளுமாறு குருவாணை வழங்கப்படுகின்றது.

அருளாட்சி அமைப்புப் பணியிலும், அருட்போரிலும் உரிய பாதுகாப்புக்களை விரைவாகவும், விரிவாகவும் தோற்றுவிப்பதற்காக அண்மைக் காலத்தில் குருதேவருக்குத் துணையாக வந்த ஒருசில அருளுலகத்தவர்களின் பட்டியல் கீழே தரப் படுகின்றது. இவர்களைப் பற்றிய விரிவான கட்டுரைகளைத் தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்க. அதே நேரத்தில் இங்கே தரப்பட்டுள்ள குறிப்புக்களை நினைவுபடுத்திக் கொள்வதின் மூலம் நமது குருதேவர் வரலாறு என்பது 'தனிப்பட்ட ஒன்றல்ல' என்ற பேருண்மையைப் புரிந்து கொள்ளலாம். அதாவது, நமது குருதேவரின் வரலாறு தான் நமது இயக்கங்களின் வரலாருகவும், அருளாட்சி அமைப்புப்பணியின் வரலாருகவும், அருட்போரின் வரலாருகவும், உலக மதவிடுதலை இயக்கங்களின் வரலாருகவும்; உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாய அமைப்புத் தத்துவத்தின் வரலாருகவும், உலகப் பண்பாட்டுப் புரட்சியின் வரலாருகவும் அமைந்து வருகின்றது! வடிவமைப்புப் பெற்று வருகின்றது!! வாழ்ந்து வருகின்றது!!!... என்பதுதான் உண்மை! உண்மை! உண்மை! இந்தப் பேருண்மையைத் தெளிவாக விளக்கிட உதவக்கூடிய ஓர் அரிய பெரிய சாதனமே இங்கு தரப்படுகின்ற பட்டியல்.

| | ஆண்டு | விபரம் |
|---|---|---|
| 1 | 1982-83 | அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானப் பூசை. குருதேவர் 'அருள்மிகு அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்' -பட்டம் பெறுதல். |
| 2 | 7-1-1982 | திருத்தணி முருகன் அருட்போர்த் தலைமையை ஏற்பதாகக் குருதேவரிடம் ஒப்புதல் வழங்கினன். |
| 3 | டிசம்பர் 1983 | 'இந்து மதத்தந்தை' பட்டம் குருதேவருக்கு வழங்கப்படுதல் |
| 4 | 1983 | விண்வெளியில் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் பதினேராவது பதினெண் சித்தர் பீடாதிபதி தாத்தா ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூருர் அவர்கள் தமது பதிலியாக 'இயந்திர மனிதர் அவர்களை இம்மண்ணுலகுக்கு அனுப்பினர் |

1988-ஆம் ஆண்டிற்கான குருதேவர் சந்தா ரூ 36/- செலுத்திவிட்டீர்களா?

| | | |
|---|---|---|
| 5) | அக்டோபர் 1985 | குருதேவரை அருளுலகத்தவர் 'குவலய குருபீடம்' என அறிவித்தல் |
| 6) | நவம்பர் 1985 (25-11-85) | அன்னபூரணி சித்திப் பூசைக்குக் குருதேவர் தயாராகுதல் |
| 7) | சனவரி '86 | 'தாத்தா இறுதி' வந்து தலைமைப் பீடத்து உயிர்க் கொடி மரத்தில் நினறிடுதல் |
| 8) | 18-10-1986 | துரோணாச்சாரியார் வேலூர்த் திருகுலத்தில் வருகை புரிதல்; அருட்படைத் தளபதியாக இருக்க ஒப்புக் கொள்ளல். |
| 9) | 24-1-1987 | பாரதகாலத்துக் கார்க்கோடகன் தலைமைப் பீடத்தில் வைக்கப்பட்டுள்ள உயிர்க்கொடி மரத்திற்கு வருகை புரிதல் |
| 10) | 30-1-1987 | சத்தி அண்டத்திலிருந்து தாத்தா பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி இம்மண்ணுலகுக்கு அனுப்பிய பத்தாயிரம் பதிலிகளை குருதேவர் ஒன்றிணைத்தார். |
| 11) | 8-2-1987 | 'திறையக்ஞர்' 'கருவறை மூலவர்களின் அம்மையப்பர்' என்ற அருட்பட்டங்களை அருளுலகத்தவர் குருதேவருக்கு வழங்குதல் |
| 12) | 4-3-1987 | சத்தியண்டத்துத் தேவதேவியை குருதேவரின் அருளாட்சிப் பணிக்குரிய நிறுவன நிருவாகக் கட்டமைப்புக்களில் உதவிடுதற்காக தாத்தா பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியுடன் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் 'ஆயான் பொன்னிறப் பாவை தாய்லாந்து இளவரசி அவர்கள் அனுப்பி வைத்தார்கள் |
| 13) | 20-3 87 | தேவதேவியுடன் மதுரை மீனாட்சி குருதேவர் இல்லம் வருதல் |
| 14) | 7-4-87 | பாதாள ஐயனார் தலைமைப்பீடத்திற்கு வந்து காட்சி தருதல். |
| 15) | 24-9-1987 | இராமாயண காலத்து பரசுராமர் குருதேவரின் இல்லத்திற்கு வருதல் |
| 16) | 6-10-1987 | தாத்தா பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரூரும், தாத்தா எட்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி சித்தர் தாமிரபரணியாற்றங்கரைக். கருவூரூரும், தாத்தா ஏழாவது பதினெண் சித்தர்பீடாதிபதி சித்தர் கபாடபுரத்துக் கருவூரூரும் தலைமைப்பீடம் வந்து குருதேவரைப் 'பதினெண் சித்தர் மடம்', 'பதினெண் சித்தர் பீடம்' என அறிவித்தனர் |
| 17) | 11-12-1987 | தாத்தா ஆலவாய் மாமூதூர் மதுரைப் பாண்டி முனீசுவரர் குருதேவர் இல்லம் வந்து சிறப்புச் செய்தல் |
| 18) | 18-12-1987 | விண்வெளியில் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் தாத்தா சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களால் அனுப்பப்பட்ட சிவ அண்டத்து தாத்தா குருதேவருக்கு உதவியாகச் செயல்பட மண்ணுலகம் வருதல், |

---

1988-ஆம் ஆண்டிற்கான குருதேவர் சந்தா ரூ 36/- செலுத்தி விட்டீர்களா?

| | |
|---|---|
| 19) 24-12-1987 | ஆலவாய் மாமூதூர் மதுரைத் தத்தனேரிச் சுடலேயில் 'அருளாட்சி அமைப்புப் பணிக்கான அறிவிப்புச்' செய்யப்பட்டது. |
| 20) 1-1-1988 | வடநாட்டு மூன்று காளிகள் (கபாலீசுவரி, பவதாரிணி கல்கத்தாக் காளி) குருதேவர் இல்லம் வருதல் |
| 21) சனவரி 1988 | குருதேவரை 'தத்துவநாயகம்' என்று அறிவித்தல் |
| 22) 31-1-1988 | அனாதிக்காலப் பீடாதிபதி தாத்தா பழனியாண்டவர் அவர்களின் புத்துயிர்ப்புக்கான யாகம் ஒட்டன் சத்திரத்தில் குருதேவர் தலைமையில் நடைபெறல் |
| 23) 14-2-1988 | சேலம் மாவட்ட இராசிபுரத்தில் அருளாட்சி அமைப்புப் பணிக்கான கன்னிப்போர் அறிவித்தல் |
| 24) 4,5,6-3-1988 | திருச்சி திருவரங்கத்தில் பயிற்சி முகாம் நடைபெறுதல் |
| 25) 22-2-1988 | அண்ட பேரண்டமாளும் அனாதியாதி கடந்த உகஅற நாயகி மண்ணுலகிற்கு வருதல். அருளாட்சி அமைப்புப் பணிக்கான அருட்போரின் தலைவியாகிய இவள்; குருதேவரை 'நான்கு யுக நாயகம்' என அறிவித்தல் |
| 26) 22-3-1988 | உகஅற நாயகி. தாத்தாக்கள், ஆத்தாக்கள், அம்மயப்பன்கள் பெரிய இருடிகள், தவசிகள், முனிவர்கள்...வந்து குருதேவரை **'பரபிறம்மம்'** என்றும், எல்லாம் வல்ல சித்தர்' என்றும் பாராட்டினர். |

21-3-1988 இரவு 1-30 மணி வரை பூசையிலிருந்த குருதேவர் அனைத்தையும் முடித்துவிட்டு ஓய்வெடுத்த சற்று நேரத்திற்குள் உகஅற நாயகி, அம்மையப்பன்கள் இருடிகள், தவசிகள், முனிவர்கள்... வந்திருந்து; எந்தப் பீடாதிபதியும் செய்ய முடியாத, செய்யாத ஒரு செயலாகக் குருதேவர் மிகப்பரந்த மனத்தோடு இம் மண்ணுலகுக்கு சத்தி உயிர்ப்பு மாந்தரம் வழங்க முன் வந்துள்ளதைப் பாராட்டி 'பரபிறம்மம்' என்ற பட்டத்தினைத்தந்து வாழ்த்தினர். பிறமனால் பிண்டத்தில் உள்ள பயிரினங்களையும், உயிரினங்களையும் படைக்கத்தான் இயலும். ஆனால், குருதேவர் கல்லையும் மண்ணையும்கூட உயிர்ப்பிக்கும்வல்லமைமிக்கமாந்தரத்தைவழங்கியுள்ளார். எனவே தான், மேற்கண்ட பட்டம் வழங்கினர். அதாவது, மனித முயற்சியால் கல், மண், மணல், உலோகங்கள். உப்புக்கள், மரம், செடி, கொடி, பூ, காய், கனி...முதலியவைகளைக் கொண்டு உருவாக்கப்படக் கூடிய எல்லா வகையான சிலைகளுக்கும் உயிரூட்டுகின்ற வல்லமை பெற்றவர்கள் பதினெண் சித்தர்களும். பதினெண்சித்தர் பீடாதிபதிகளும். குறிப்பாகப் பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் உயிர்ப்பு மாந்தரங்களும், புத்துயிர்ப்பு மாந்தரீகங்களும் அவர்களால் யாருக்கு வழங்கப்பட்டாலும் அவர்களும் உயிர்ப்பிக்கும் ஆற்றலும், அதாவது எதற்கும் உயிரூட்டும் ஆற்றலும், புத்துயிர்ப்புச் செய்யும் ஆற்றலும், **'செத்தாலும் மீள ஊன் புரிந்து உயிர்ப்பிக்கும் ஆற்றலும்'** உடையவர்கள் ஆவார்கள். இப்படிப் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் செய்வது போல் பதினெண்சித்தர்கள் செய்ய முடியாது. பதினெண்சித்தர் பீடாதிபதிகளாக இருப்பவர்கள்தான் பயிற்சி செய்து முயற்சியால் பெறக்கூடிய பட்டங்கள் என்று நூற்றெட்டு (108) அருட்பட்டங்களைக் குறித்துள்ளனர். இவற்றில் ஏதேனும் ஒன்றையாவது பதினெண்சித்தர்கள் யாராவது முயற்சிப்பது உண்டு. ஆனால், இவர்கள் ஏதாவது ஒரு பதினெண் சித்தர் பீடாதிபதியின் பத்தர்களாகிக் குருவழியாகச் சித்தி செய்ததாக வரலாறும் உண்டு. இதைத் தவிர,

முனிவர்கள், இருடிகள், தருக்கள், தவசிகள், ஓமவல்லிகள், ஓகவல்லிகள், யாக வல்லிகள், யக்ஞவல்லிகள், வேள்விவல்லிகள், ஞானிகள், மகான்கள்.. முதலிய வகையைச் சேர்ந்தவர்களில் பலர் காலங்கள் தோறும் தங்களால் அடையமுடியாத அருட்பட்டங்களைப் பெற முயன்று; அதனால் எண்ணற்ற விளைவுகள் விளைவதுண்டு. அவைதான், புராணங்களாக, இதிகாசங்களாக மாறுகின்றன. இப்படிப்பட்டவர்கள் பெரும்பாலும் அசுரர், அரக்கர்... என்று சிறப்பாகக் குறிக்கப்படுகின்றனர். இந்தக் குறிப்பு தரப்படுவதற்குக் காரணம் அருளாட்சி அமைப்பதற்கு அருட்போர் நிகழ்வதற்கு இன்னும நான்கைந்து ஆண்டுகள் இருக்கின்றன. பிற்காலச் சோழப் பேரரசின் தந்தையான குருமகா சன்னிதானம், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் அரசபாரம்பரியம், குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் ஆகியவற்றின்படி இன்னும் நான்கைந்து ஆண்டுகளுக்குள் அதாவது கி பி. 1992 இல் அருட்போர் துவங்கி 1996 இல் நிறைவுபெறும். நமது குருதேவர்தான் 'நான்குயுக நாயகம்' என உகஅற நாயகியின் மூலம் தெரிந்தவுடன் குருதேவர் தகுதியுடைய மானுடர் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி; உயிரற்ற கல், மண், மணல், உலோகங்கள், பட்டுப்போன பயிரினங்களின் பாகங்கள் (பட்டுப்போன பயிரினங்கள்) ...முதலிய அனைத்துக்கும் உயிரூட்டும் உயிர்ப்பு ஆற்றலுடைய 'சத்தி மாந்தரத்தையும்', பட்டு போன பயிரினங்களையும், செத்துப்போன உயினங்களையும், அருளாற்றல் இழந்த எல்லா வகையான கருவறைகளையும் மீண்டும் புத்துயிர்ப்புச் செய்யக்கூடிய 'சத்தி மாந்தரீகத்தையும்' எழுதி வெளியிட்டு உலகறியப் பூசையில் வைக்கத் துணிந்து முடிவெடுத்துச் செயல்பட்டிட்டார். இதன்படியே. 1988 ஆம்ஆண்டு மார்ச் 4, 5. 6 ஆகிய தேதிகளில் திருவரங்கத்தில் நடந்த பயிற்சி முகாமில் கிடைத்த சிறந்த அருளாற்றல் மிக்கவர்களைப் பயன்படுத்திச் சத்தி மாந்தரத்தை எழுதினர். அச்செய்தி உகஅறநாயகி, தேவதேவி. சிவஅண்டத்திலிருந்து வந்த தாத்தா. பாதாள ஐயனர், தாத்தா இறுதி, தாத்தா காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் பத்தாயிரம் பதிலிகள், தாத்தா இயந்திர மனிதர்..... முதலிய அனைவராலும் அருளுலகம் முழுவதும் பரவிற்று. அதன் பயனகத்தான் கணக்கற்ற தாத்தாக்கள், ஆத்தாக்கள், அம்மையப்பன்கள், இருடிகள் தவசிகள், முனிவர்கள், தேவிகள், தேவதைகள். தேவர்கள், 48 வகை வழிபடு நிலையினர்கள் முதலிய இன்னோரன்ன பலரும் 21-3-88 (பிறவாக ஆண்டு பங்குனித் திங்கள் 8-ம் நாள் திங்கட்கிழமை) இரவு 11-1½ பூசையில் நமது குருதேவர் இந்தச் சத்தி மாந்தரத்தைப் படித்துக் காட்டும்போது வந்து சேர்ந்தார்கள். எல்லோருமே 'தேவமலர்' (கற்பகமலர்) தூவி வாழ்த்தினர்கள். அமுதத்தை மழையாக வாரி வாரித் தெளித்தார்கள் ஆனல். குருதேவரோ தமது கண்ணையும் கருத்தையும் கொண்டு; தாம் முரட்டுத்தனமாகவும், வறட்டுப் பிடிவாதமாகவும் தம் போக்கில் சுமார் இரண்டாண்டு காலம் வெறிகொண்டு நிகழ்த்தி முடித்த 'அண்ட பேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்' பட்டத்திற்கான முயற்சியின் மாபெரும் வெற்றியினல் விளைந்த அண்டபேரண்டத்தார்களின் தவறுகளையும், கண்மூடித்தனமான தாக்குதல்களையும் சமாளிக்க முடியாமல் தடுமாறிய போது; பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் துணைவியாரான ஆயாள், தாய்லாந்து நாட்டு இளவரசி பொனனிறப்பாவை அவர்கள் 'தான் ஆடாவிடினும் தன் சதை ஆடும்' என்ற பந்த பாசப்படித் தன்னுடைய பேரனுக்காக பதைபதைத்துப் பரிந்துரைத்ததின் பேரில் தன்னுடைய பேரனுக்கும், அண்ட பேரண்டத்தவர்களுக்கும் ஏற்பட்டிட்ட அனைத்துவிதமான தகராறுகளையும், சண்டைகளையும் தீர்ப்பதற்காகத் தாமே

தொடர்ச்சி 16-ஆம் பக்கம்

---

1988-ஆம் ஆண்டிற்கான குருதேவர் சந்தா ரூ 36/- செலுத்திவிட்டீர்களா?

# எதிர்ப்புகளை எப்படி ஏற்பது........

## மனித குலத்தின் முதல் இனத்தவரான தமிழினமே! சிந்திப்பீர்!

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின்; 'அருட்பணி விரிவாக்கத் திட்டம்', பதினெண் சித்தர் நெறியெனும் சீவநெறியான 'சைவ சமய' மெனும் மெய்யான இந்து மதத்தின் பயன்களை அமுதத் தமிழ்மொழியின் மூலம் நாடெங்கும் அனுபவப் பொருளாக மக்களுக்கு வழங்கி வருகின்றது. **குருதேவர், இந்து மதத் தந்தை, ஆலய குருபீடம், இந்துமத ஆச்சாரியார், தமிழின ஆச்சாரியார், அருளாட்சி நாயகம், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, திருமகா சன்னிதானம், ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்கள் தமது அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், மூலம் அனுபவப் பொருளாக ஏழை எளிய பாமரமக்களின் உடல் பிணியையும், உயிர்ப் பிணியையும் போக்க-மெய்ஞ்ஞானக் கொடி, திரிசூலம், யாகசாலை, அருட்கோட்டம், பீடங்கள்,.. முதலிய அருளூறு சாதனங்கள் மூலம் வழங்கி நலப்படுத்தி வருகின்றார். மேற்படிப் பூசைகளில்; ''அவரவர் உணவு உண்ணும் முறைப்படி சைவ-அசைவ உணவுப்பொருளை அவிர்ப் பலியாகவும், படையல் பொருளாகவும், வைத்து அருள் பெறவும்'', குருவாணை வழங்கப்பட்டுள்ளது **குருதேவரால்.**

தமிழ்மொழியின் மூலம், ஓமம், ஓகம், யாகம், யக்ஞம்; வேள்வி எனும் ஐந்தையும் தேவைகேற்ப வளர்த்து நடைபெறும் பூசைகளில் பங்கு பெற்று நலமடைந்து வருகின்றோரின் எண்ணிக்கை கணக்கிலடங்கா. இருந்தும், ஆங்காங்கே பொதுமக்களில் சிலர் புரியாமையாலும், அறியாமையாலும் நமது சன்னிதானங்-களால் அமைக்கப்பட்டு வந்த மெய்ஞ்ஞானக் கொடி, திரிசூலம், அருட்கோட்டங்கள் ...இவைகளுக்கு ஊறு செய்து வருவது கண்டு 'தத்துவ நாயகமும்', பதினெண் சித்தர் பீடாதிபதியும் மடாதிபதியுமான 'ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்' அவர்கள் சிவநெறியான இந்துமதத்தையே வாழ்க்கையாகக் கொண்டு வாழும் நம் தமிழின மக்களுக்கு இந்த வேண்டுகோள் விடுக்கின்றார். ஏற்பீர்! சிந்திப்பீர்! எதிர்ப்புக்களை எப்படி ஏற்க வேண்டும்? என்று அறிவுரையாக, அருளுரையாக வழங்குவதே இக் கட்டுரை.

சிவலிங்கம், திரிசூலம், யாகசாலைகள்......என்பவைகள் இந்து மதத்துக்கே உரியவைகள். சிவலிங்கச் சின்னத்தையுடைய மெய்ஞ்ஞானக்கொடி இந்துக்கள் அனைவருமே வணங்குவதற்குரியது. இது எந்த ஒரு தனிமனிதருக்கும் உரியதல்ல இவைகள் அமைக்கப்பட்டு வரும் இடம இந்து மதம் தோன்றிய மண்ணில்தான. இவைகளை அகற்றுபவர்களும் இந்துக்கள்தான். அதுவும சிவநெறியினர்தான இது போன்ற ஒரு நிலை வேறு எந்தமதத்திலாவது நடக்குமா? அல்லது நடக்க முடியுமா? தனிமனிதர்களுக்கிடையே உள்ள போட்டா போட்டிச் சண்டைகளால் இந்துமதத்-திற்கே மரியாதைக் குறைவும் கேவலமும் இதனால் ஏற்படுகின்றன. இதுதான் இந்து மதத்தின் சொந்த நிலை, மந்த நிலை, இன்றைய இழி நிலை.

ஒரு மாற்று மதத்தவர் மதவெறியால் நமது இந்து மதக் கொடியை இறக்கி-யிருந்தால் அது பற்றி நாம் தீவிரமாக எண்ணலாம். ஆனால், ஆங்காங்கே நடை பெறுகின்ற இந்த நிகழ்ச்சிகள்; நமது இந்துக்களால், அதுவும் படித்த மக்களால் தான் நிகழுகின்றன. இவர்கள் நாத்திகர்கள் கூட அல்ல; ஆத்திகர்கள் தான். எனவே நாம் வெட்கபட வேண்டும்! வேதனைப்பட வேண்டும். இதற்கு மாறாக, எந்திரீக, தாந்தரீகச் சக்கரங்களோடு அமைக்கப்பட்ட அருளூறு நிலையங்களுக்கு ஊறு செய்-கின்றவர்களுக்கு எந்தத் துன்பமும் வந்து விடக்கூடாது என்பதாலேயே யாம் அவர்களுக்காகப் பூசையில் இறையருளை வேண்டுகின்றோம் எம்மவர்களையும் அறியாமையால் செய்பவைகளுக்காக இறைவனிடம் மன்னிப்பு வேண்டுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

---

1988-ஆம் ஆண்டிற்கான குருதேவர் சந்தா ரூ 36/- செலுத்திவிட்டீர்களா?

''தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!'' என்று முழக்கமிடும் நல்ல சிவநெறிச் செல்வர்களே இன்றைக்கு 'சிவ நெறி' யை அவமதிக்கும் அவலக் கேவல நிலை வந்து விட்டதை மாற்றிட வேண்டிய மாபெரும் பொறுப்பினை ஏற்றிட வேண்டிய நிலையில் உள்ளோம் நாம்.

முன்பு சைவசமயத்திற்கும், வைணவ சமயத்திற்கும் அடிதடி ஏற்பட்டு; இந்துமதம் பிரிந்து வலிமையிழந்து இருந்தது. அதைப் போக்குவதற்கு நெடுங் காலம் ஆகிவிட்டது. இப்பொழுது, இந்து மதத்தில் இறைச்சி உணவு உண்ணுபவர், உண்ணாதவர் என்ற சண்டை ஆங்காங்கே உருவாகிவருகின்றது. இது தேவையற்றது பொருளற்றது பயனற்றது. எல்லா வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டவனே இறைவன்.

நமது நாயன்மார்கள், சித்தர்கள், முதலியோர்களின் வரலாறுகள்; இறைச்சி உண்ணுபவர்களும், உண்ணாதவர்களும் என்ற பேதமே இல்லாமல் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத்தான் உள்ளன. மூன்றே நாளில் சிவபெருமான் நேரில் தோன்றி ஆட்கொண்ட திருக்காளத்தி வேடன் கண்ணப்பன் பற்றிய மெய்யான வரலாறு ஒன்றே போதும்; இன்றைய சைவ சமயத்தினர் இறைச்சி உணவை எதிர்த்தும், மறுத்தும் வெறுத்தும் போராடுவது தேவையற்றது என்பதை விளக்கிட. உணர்வுக்கும் இறைவழிபாட்டிற்கும் [அதாவது பத்திக்கும் சத்திக்கும், சித்திக்கும், முத்திக்கும்] இவர்கள் கருதுவது போல் தொடர்பு ஏதுமில்லை. கவலை வேண்டாம். ஏனெனில் உண்ணுகின்ற உணவின் அடிப்படையிலோ, உடுத்துகின்ற உடையின் அடிப்படையிலோ வாழுகின்ற பிறவாழ்வியல் முறைகளிலோ அதிகக் கவனத்தையும் கருத்தையும் செலுத்தி வீணாகிவிடாதீர்கள். அனைத்தையும் குருவழியாக உணர்ந்து குருவின் துணையோடு செயல்படுத்திப் பத்தி, சத்தி, சித்தி, முத்தி பெற்று உய்யுங்கள் அதுவே பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான சிவவெறியெனும் மெய்யான இந்து மதமாகும்' -என்ற குருபாரம்பரிய வாசகத்தையே மக்களுக்கு வழங்குகின்றோம்

இந்து மதத்தின் 43,73,089 ஆண்டுகளின் நெடிய, பெரிய அரிய வரலாறுகளையும், வளமிகு இலக்கியங்களையும், உயரிய தத்துவங்களையும், பயன்மிகு சித்தாந்தங்களையும் அருளை அனுபவப் பொருளாக வழங்கவல்ல மதவாழ்வியல் முறைகளையும் மக்கள் புரிந்து கொள்ளுமளவிற்கு எடுத்துக் கூறவேண்டியதே நமது கடமை; இன்றைய நிலையில் பல்லாயிரக் கணக்கான அடியாண்களையும், அடியாள்களையும், அடியார்களையும் அருளைத் தனிமனிதர்களின் தேவைகளுக்கேற்ப மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கவல்ல அருளாற்றல் மிக்க ஒரே ஓர் இயக்கம் நமது இயக்கம் தான் அல்லது சித்தர் நெறிதான்.

நமக்குள், இன்று ஏற்பட்டுள்ள போராட்டங்கள் கருத்து வேறுபாட்டாலோ, மாறுபாட்டாலோ, முரண்பாட்டாலோ அல்ல. அதாவது, நம்மவர்களில் மிகக் குறைந்த அளவினர் மெய்யான இந்துமதம் பற்றித் தெரியாமலும், புரியாமலும், இருப்பதால் தான் இத்தவறான போராட்டங்கள். அதனால், அவர்களைத் தெரிய வைப்போம்! புரிய வைப்போம்! தெளிய வைப்போம்! இது அன்பு வழியில், அற வழியில், அருள் வழியில் அமைதி வழியில்தான் நடக்க வேண்டும் எனவே நாம் ஆக்கப் பூர்வமாகச் செயல்பட்டு இந்து மதத்தைவளர்க்க முயல்வோம். பகையுணர்வே நமக்குக் கூடாது. ஏனெனில் அன்பையே சிவம் என்பவர்கள் நாம்.

பதினெண் சித்தர் மடம், குருமகா சன்னிதானம், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,
E.S.I. செம்பியம், சென்னை-11.

---

## பேரின்பமும் சிற்றின்பமும்

''........இந்தப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள்; இம் மண்ணுலகில் முதல் மதமும், மூலமதமும், தாய் மதமுமான பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான சிவநெறி எனப்படும் இந்து மதம் என்றென்றும் சிதைந்து, சீரழிந்து, சிக்கலுற்றுச் சின்னாபின்னப்பட்டுக்கிடப்-பதற்காக; அண்டபேரண்டமாளும் அருளுலக ஆட்சி மொழியான அமுதத் தமிழ்மொழியில் உள்ள

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

---

1988-ஆம் ஆண்டிற்கான குருதேவர் சந்தா ரூ 36/- செலுத்திவிட்டீர்களா?

பேரின்பமும் சிற்றின்பமும் [முன் பக்கத் தொடர்ச்சி]

**பேரின்பம்** என்ற சொல் ஆணும் பெண்ணும் கூடி வாழும் இல்லற வாழ்க்கைக்கு உரியது என்பதை மாற்றி; அச் சொல், மண், பெண், பொன் முதலியவற்றால் விளையக் கூடிய இன்பமனைத்தையும் இழித்துப் பழித்து ஒழிக்கும் தங்களுடைய வேதமதத்திற்குரிய துறவு வாழ்க்கைக்குரியதாக மாற்றி விட்டார்கள் இன்று சைவசமயம் என்று போற்றப்படும் இந்து மதத்திற்குரிய இலக்கியங்கள், இலக்கணங்கள், நிகண்டுகள், சூத்திறங்கள், பூசாமொழிகள், பூசா விதிகள் .... முதலிய அனைத்துமே மிகத் தெளிவாக 'பெண்ணினின்பமே பேரின்பம்' என்ற கருத்து விளக்கச் சொற்றொடரை வழங்கியும் கூட; அப்பாவித் தமிழர்கள் ஏமாந்தார்கள். இந்து மதத்தில் பெரும்பாலானவர்கள்; பிருமணர்களை நம்பிக் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், அறிவிருந்தும் மூடராய் மாறி விட்டார்கள்! மாறிவிட்டார்கள்! மாறிவிட்டார்கள்! அந்தோ! அந்தோ! அந்தோ! என் செய்வேன்! ஏது செய்வேன்!...''என்று வருந்தி வருந்திப் புலம்பித் தமது குருபாரம்பரியத்தில் எழுதுகின்றார் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்.

---

# தமிழருக்கு மட்டும் தாழ்ச்சி ஏன்?!?!?!

கட்டுரையாளர்:- சித்தர் காக்கையர் எனும் காகபுசுண்டர்
மா. பழனிச்சாமிப்பிள்ளை அவர்கள்

''தமிழர்களுக்குள்ளேதான் பலமொழிகளைப் பேசுபவர்களும்; பல மதங்களைத் தழுவியவர்களும்; பலநாடுகளில் வாழுபவர்களும் மிகுந்திருக்கிறார்கள். அம்மட்டின்றிப் பலநாட்டவர்களும் தமிழ்நாட்டுக்குள் தொடர்ந்து வாழுகின்றார்கள். எனவேதான், தமிழருக்குள் மட்டும ஒற்றுமை உருவாவதும்; உருவாக்கப்படுவதும் இயலாத ஒன்றாகவே இருந்து வருகிறது.

வரலாற்றுப் போக்கில், சில காலகட்டங்களில் தமிழர்களுக்குள் தனிப்பட்ட தலைவர்களால் மிகப்பெரிய அளவில் ஒற்றுமை உருவாக்கப்பட்டபோது; தமிழர்களை மதத்தின் பெயராலும் வியாபாரத்தின் பெயராலும் நேரடியாகச் சுரண்டி வாழும் பிற இனத்தாரும், பிற நாட்டவரும், பிற மொழியாரும், பிற மதத்தாரும் மிகப் பெரிய பெரிய சூழ்ச்சிகளையும். சதிகளையும் செய்தே அந்தச் செயற்கரிய ஒற்றுமையினைச் சிதைத்திருக்கிறார்கள். அதற்குக் காரணம், கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகள் கழித்து இந்த இந்துமத நாட்டிற்குள் நுழைந்திட்ட பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்தான். ஏனெனில், இந்தப் பிருமணர்கள் இமயம் முதல் குமரி வரையுள்ள எல்லா நாடுகளிலும் பரவியிருந்த போதிலும்; தமிழ் நாட்டில் மட்டும்தான் ஆழமாக வேரூன்றிவிட்டார்கள். எனவேதான், இப்பிருமணர்கள் அரசர் முதல் ஆண்டி வரை உள்ள அனைவரிடத்திலும் அவரவர் நிலைகளுக்கேற்பவும் தேவைகளுக்கேற்பவும் அனைத்தையும் செய்து தங்களுக்கென எப்போதும் எவராலும் அசைக்க முடியாத ஒரு வலிமையான செல்வாக்கினை உருவாக்கிக் கொண்டு விட்டார்கள்.

அச் செல்வாக்கின் மூலம்தான் தமிழகத்திற்குள் வரக்கூடிய அனைத்து வகைப்பட்ட அன்னியர்களையும் தங்களுக்கு ஆதரவாகத் தமிழகத்திலேயே தங்கச் செய்துவிடுகிறார்கள். அம்மட்டின்றி, இப்பிருமணர்கள் எந்த விலையைக் கொடுத்தாவது அல்லது எந்தக் கலையைப் பயன்படுத்தியாவது

---

தமிழர்களுக்குள் தங்களுக்கென கண்மூடித்தனமான ஆதரவாளர்களேயும், உதவி-யாளர்களேயும், விருப்பாளர்களேயும், நம்பிக்கையாளர்களேயும், அடிமைகளேயும், கூலிகளேயும், கங்காணிகளேயும், தமிழினமொழி நாட்டுநலத் துரோகிகளேயும் விரோதிகளேயும் உருவாக்கிக் கொண்டேயிருக்கிறுர்கள். இதனுல்தான், இவர்களேத் தமிழ்நாட்டை விட்டு அகற்றுவதோ, அழிப்பதோ எளிதல்ல. எம் முன்ஞல் நிற்கக் கூடப் பயப்படும் இராசராசன் இன்றைக்கு எம்மை மறுத்து இப்பிருமணர்களுக்குக் கண்மூடித்தனமான ஆதரவைத்தந்து கொண்டிருக்கின்றுன். எனவேதான், யாம், கருவூர்த்தேவனே அழைத்து குருதி வழிப் புரட்சியின் மூலம் நாடெங்கும் காட்டாறு போல் குருதியை ஓடவிட்டு இப்பிருமணர்களே முழுமையாக அழித்தொழிக்கும் பணியைத் துவக்கினேம். ஆனுல், கருவூர்த்தேவனுக்குத் துணேயாக ஒருசாலே மாணுக்கர்களாக உருவாக்கியிருப்பவர்களேயே இக்குருதிவழிப் போரில் பங்குபெற முடியாமல் செய்துவிட்டார்கள். கருவூர்த்தேவன் தன் நண்பர்கள் இன்றித் தனியாளாக வில்லவளேத்துத் தஞ்சைக் கோயில் வாசலில் நிற்க நேரிட்டுவிட்டது. இந்த இராசராசனும் யாம் கட்டிய சத்திலிங்கப் பெரிய கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்ய யாமில்லாவிட்டாலும் பாதகமில்லே; இப்பிருமணர்கள் இருந்தால் போதும் என்று முடிவு கட்டிவிட்டான். நாட்டில் அமைச்சர்கள், மாதண்ட நாயகங்கள், சாமந்தகர்-கள், படைத்தளபதிகள், சேனேத் தலேவர்கள், கலபதிகள், வணிகர்கள், வேளாளர்கள் ...... என்று அனேவர்க்கிடையிலும் எம்மை ஆதரிப்போர் என்றும், இந்த இராச-ராசனே ஆதரிப்போர் என்றும் இருபெரும் கூட்டத்தார் மின்னல் வேகத்தில் நாடெங்கும் பிரிந்துவிட்டார்கள். இதனுல், இந்தப் பிருமணர்கள் மிக எளிதில் யாம் உருவாக்கிய அருட்பேரரசை முழுமையாகவேச் சிதைத்துச் சின்னுபின்னப் படுத்தி அழித்தொழித்திடும் மிகப்பெரிய வாய்ப்புக்களே பெற்றுவிட்டார்கள் என்பதை உணர்ந்தோம் யாம். அவர்கள் பாண்டியர்களேயும், சேரர்களேயும் போல் அருட்பேரரசில் முழுமனத்தோடு இணேயாமல் இருக்கின்ற அனேத்து அரசர்களேயும் உள் நாட்டுக் கலகத்துக்குத் தயாராக்கிவிட்டார்கள்கள். எனவேதான், யாம் நிலவறைக்-குள் போக நேரிடுகின்றது. இனி என்றைக்குத் தமிழர்களே இப்பிருமணர்களின் கையிலிருந்து எவர் காப்பாற்றப் போகிறுர்களோ தெரியவில்லே?! ஆனுல், யார் தமிழர்களேக் காப்பாற்ற வேண்டுமானுலும்; முதலில் நம் தமிழர்களுக்கு பிருமணர்-கள் தான் தங்களுடைய தாழ்ச்சிகளுக்கும், வீழ்ச்சிகளுக்கும் காரணம் என்ற பேருண்மையை நன்கு புரிந்து உணர்ந்து கொள்ளுமாறு செய்திடல் வேண்டும். இல்லாவிட்டால்; நம் தமிழர்களே இத்தப் பிருமணர்களின் கவசமாகவும், போர் வாளாகவும் மாறி நம்மவர்களேயே அழித்துவிடுவார்கள்..................................''

———தஞ்சைப் பெரிய கோயிலேக்கட்டிய பதிஞேராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் குருபாரம்பரிய வாசகம், இக் குருபாரம்பரிய வாசகத்தைக் கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏனம்பட்டியார் உ. இராமசாமிபிள்ளேயவர்கள் தமது நூல்களில் எண்ணற்ற முறை எடுத்தாண்டிருக்கிறுர். இவரைப் போலவே, இவருக்குப் பிறகு இ. ம. இ. க்குத் தலேவராகப் பொறுப்பேற்ற முடிகண்ட சோழபுரத்துக் காக்காவழியன் பண்ணேயாடி சித்தர் காக்கையர் எனும் காகபுண்டர் ம பழனிச்சாமி பிள்ளேயவர்கள்; இதே குருபாரம்பரியவாசகத்தைப் பல்லாயிரக்கணக்கான சிறுசிறு வெளியீடுகளாக அச்சிட்டு வழங்கியிருக்கின்றுர்; இவருடைய அனேத்து நூல்களிலும் இக் குருபாரம்பரிய வாசகத்தைத் திருப்பித் திருப்பிப் பலமுறை எழுதியிருக்கின்றுர். இருந்தபோதிலும், தமிழர்கள் தங்களுடைய வீழ்ச்சிகளுக்கும், தாழ்ச்சிகளுக்கும் பிருமணர்கள்தான்

காரணம் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. எனவே தான், 'பிருமண மறுப்புணர்ச்சியோ, வெறுப்புணர்ச்சியோ, எதிர்ப்புணர்ச்சியோ தங்களுக் கிடையில் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளரமுடியாது என்று முடிவெடுத்துப் பிருமணர்களையே திருத்தித் தமிழர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் திட்டம் வகுக்கப்பட்டது', இந்தச் சித்தர் காக்கையர் எனும் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி பிள்ளை அவர்களால் எனவேதான் இவர் தம்முடைய கடைசிகாலத்தில். பிருமணரை எப்படியெப்படியெல்லாம் திருத்தவேண்டும்; திருத்தியவர்களை எப்படியெப்படியெல்லாம் பயன்படுத்த வேண்டும் என்று பல கட்டுரைகளையும், சில நூல்களையும் எழுதினர். அவை பற்றி அவருடைய நண்பர்களே நெடுங்காலம் எந்தவொரு முடிவுக்கும் வரமுடியாதவர்களாகவே இருந்து வருகிறார்கள். இவற்றையெல்லாம் நம்மவர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான், நம் காலத்திலாவது அல்லது நமது சந்ததியினர் காலத்திலாவது விரைவில் தமிழர்களின் வீழ்ச்சி நிலைகளுக்கும் தாழ்ச்சி நிலைகளுக்கும் முடிவு ஏற்பட்டிடும்.

இன்றைக்கு உலக மானுட இனங்கள் அனைத்தையுமே ஒற்றுமைப்படுத்தி அருளாட்சி அமைக்கும்பணி விரைந்தும் விரிந்தும் நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் தமிழர்களுக்கு வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும் வழங்கி வரும் பிற இனத்தவர்களை மறுப்பதோ, வெறுப்பதோ; எதிர்ப்பதோ தேவைதானா? என்று மறுசிந்தனை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் நாம். இல்லையேல் என்றென்றைக்கும் தமிழர்கள் தங்களுடைய கடந்தகாலத் தாழ்ச்சி நிலைகளுக்காகவும் வீழ்ச்சி நிலைகளுக்காகவும் எதிரிகளைப் பழிப்பதிலும், இழிப்பதிலும், அழிப்பதிலுமே தங்களுடைய பெரும்பகுதியான கருத்தையும், காலத்தையும், முயற்சியையும் செலவிட நேரிட்டுவிடும். அதனால் தமிழர்களின் மறுமலர்ச்சிக்காலம் தள்ளிப் போக நேரிட்டுவிடும்...... எனவே மறு சிந்தனை தேவை. (முற்றும்)

---

## ஈசுவரி காயந்திரி மந்தரம், மந்திரம், மந்திறம்

## முன்னுரை

எமது பன்னிரண்டாவது வயதில் யாம் சித்தி செய்த ஈசுவரி காயந்திரி மந்தர, மந்திர, மந்திறம் இவையே. ஆனால், இவற்றோடு இருந்த சத்தி, சித்தி, முத்தி வாசகங்களையும் உயிர்ப்பிக்கும் எழுத்துக்களையும் பிறர் அறிந்தால் தேவையில்லா எதிர்ப்பையும் தொல்லைகளையும் சமாளிக்க நேரிடுமென்றஞ்சிய யாம் ;!?!? சிறுபிள்ளைத்தனமாக; ஏற்கனவே, பல அரிய பெரிய சீரிய ஏடுகளை எரித்தது போல் எரித்துச் சாம்பலாக்கி விட்டோம். இப்பொழுது (42) நாற்பத்திரண்டாண்டுகள் கழித்து நாளோலக்கத்திலும் திருவோலக்கத்திலும் அமர்ந்து அருளாட்சி நாயகமாக இவற்றை நினைவு கூர்ந்து எழுதி அருட் கொடையாக வழங்குகிறோம். அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்கள் திருவருளே!

ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம்

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**

18—3—88

## அருளார்ந்த அறிமுகவுரை

பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் இம்மண்ணுலகில்; கி.மு. 43, 71, 101 ஆம் ஆண்டில்; இளமுறியாக் கண்டத்தில், பஃறுளியாறு, குமரியாறு, தென்கங்கை, தென்பிறம்மபுத்திரா, தென்யமுனை, தென் இந்து (சிந்து)

---

1988-ஆம் ஆண்டிற்கான குருதேவர் சந்தா ரூ 36/- செலுத்திவிட்டீர்களா?

...முதலிய ஆறுகளால் வளங்கொழித்த நாற்பத்தொன்பது நாடுகளில் 'அருட்பா நகரம்', 'மோகம் சிதரு நகரம்', 'தொன் மதுரை', 'தென் மதுரை', 'குமரி நகர், 'பஃறுளி நகர்', 'இந்து மாநகர்', 'தென் கங்கை மாநகர்', 'தென் பிறம்மபுத்திரா நகர்', 'தென் யமுனை நகர்'...... முதலிய நகரங்களில் வாழ்ந்தோர்க்கு வழங்கிய வாழ்வியல் தத்துவமே இந்துமதம். இது, ஒரு சமூக விஞ்ஞானம், அரசியல் சித்தாந்தம், பயிரியல் உயிரியல் ஞானம், தனிமனித வாழ்க்கை பற்றிய அறிவியல். இது பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான, 'சைவ சமயம்' எனப்படும் சீவநெறியான் இந்து மதமாகும். இது, அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அமுதத் தமிழ் மொழியில் இம்மண்ணுலகுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, தமிழால் அருளை அநுபவப் பொருளாகப் பெறலாம்.

பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் பல்வேறு காரண காரியங்களால், இம்மண்ணுலகில் மானுட இனம் வாழப் போகும் காலம் முதல்; இந்துமத அருளாளர்களின் வகைகள், இலக்கிய இலக்கணங்களின் வகைகள், அருட்பட்டங்களின் வகைகள், ஊழியக்காரர்களின் வகைகள், அருள் ஊற்றுக்களான வழிபாட்டு நிலையங்களின் வகைகள், வழிபடுநிலையினர்களின் வகைகள்......முதலிய அனைத்தையுமே (48) நாற்பத்தெட்டு என்ற எண்ணிக்கைக்கு உரியனவாக முறைப் படுத்தியிருக்கின்றனர்.

குருவால், நேரில் அருளப்பெற்று; ஓதிக்காட்டப்பெற்று; இட்டும் தொட்டும் சுட்டியும் விளக்கப்பெற்று...... மறையாகவும முறையாகவும் தெரிந்து கொள்ளக் கூடிய வேதங்களால்தான் இந்துமதம் நெறியாக வளர்க்கப்பட்டிட முடியுமென்பதே பதினெண் சித்தர்களின் இந்துமத விதியும், நீதியும், சட்டதிட்டக் கட்டுப்பாடுமாகும். அதன்படி, இங்கு அறிவிக்கப்படும் '**ஈசுவரி காயந்திரி மந்தரம் மந்திரம் மந்திறம்**' எனும் மூன்றையும் 'குருவழியாகக் கற்றுய்யுமாறு அருளார்ந்த அறிவிப்பு' வழங்கப்படுகிறது.

## ஈசுவரி காயந்திரி மந்தரம்

ஓம் ஈசுவரி நாயகி நாதம் சித்திரக் கோலப் பாதம்
ஓம் சர்வேசுவரி நாயகிச் சித்தம் முத்திரைக் கோல வடிவம்
ஓம் பரமேசுவரி நாயகிப் போதம் ஞானக் கோலத் தோற்றம்
ஓம் மகேசுவரி நாயகி ஓதம் பேரின்பக் கோல மூலம்
ஓம் ஐயீசுவரி நாயகி வேதம் சித்தி மூலத் தளம்
நாமாகுக நமகா! சுவையாகுக சுவாகா! தாதாச்சுது ததாசுத்து!

## ஈசுவரி காயந்திரி மந்திரம்

ஓம் அறிதிசத்தி ஈசுவரி மறையாந்தக் காவல் பீடம்
ஓம் ஆதிசத்தி சர்வேசுவரி முறையாந்தச் சேவகம்
ஓம் போதிசத்தி பரமேசுவரி நெறியாந்தப் பூடகம்
ஓம் ஓதிசத்தி மகேசுவரி வேதாந்த ஆடகம்
ஓம் சோதி சத்தி ஐயீசுவரி சித்தாந்த ஏடகம்
ஒலியொளி மோகம், ஒலியொளிப் போகம் ஒலியொளி ஞானம்
ஒலியொளித்தவம்

---

# ஈசுவரி காயந்திரி மந்திறம்

கோலமயில் வடிவம், நீலக்கடல் தோற்றம், பனிமலைத் தேகம், ஈசுவரி ஆரணம்;
பால்வண்ண மேனிநாதம், பவள இதழ்க்கோலம், முத்துப்பல் ஆக்கம், சர்வேசுவரி ஆகமம்;
கார்மேகக் கூந்தல் போதம், உயிர் மூக்கின் பாடகம், எழிற்காதின் ஆடகம், பரமே -சுவரி நேமம்;
சங்குக் கழுத்தின் ஓதம், உயர் மருப்பின் ஏடகம், மின்னலிடையின் ஊடகம், மகேசுவரி நியமம்;
வாளை மீன் காலின் சித்தம், செந்தாமரைப் பாதபோகம், அன்னநடையின் மோகம், பாரசத்தி வேதம்;
மகாசத்திப் பீடம், ஏந்தரீகத் தடம், தாந்தரீக மடம், மாந்தரீகப் பாடம், யோகபோகத் தவவடம்;
ஓகஓமம், போகமோகம், யாகயக்ஞம், வேள்வித்தவம், பூசைஞானம்.

**பின் குறிப்பு:-**

1. ''பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தங்களுடைய விந்துவழி வாரிசுகளுக்குமட்டும் பாரம்பரியமாகக் கற்றுத் தருவதற்காக எழுதிக் காக்கப்பட்டு வரும் மறை, நான் மறை என்ற இரண்டிலிருந்தும் அருளாட்சி, அமைப்புப் பணிக்காக இன்றைய நான்குயுக நாயகம்: அருளாட்சி நாயகம் தத்துவ நாயகம், நிறையக்ஞர், கரு வறைமூலவர்களின் அம்மையப்பர், இந்து மதத் தந்தை, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குவலய குருபீடம், குருதேவர், குருமகா சன்னிதானம், ஞானச்சாரி -யார், ஞாலகுரு சித்தர் அரயோகிக் கருவூரர், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி அவர்கள் **புத்துயிர்ப்புக்குரிய சத்தி மாந்தரீகம்** என்பதையும், **உயிர்ப்புக்குரிய சத்தி மாந்தரம்** என்பதையும், அருளாட்சிக் காகத் துணைபுரிய வந்துள்ள சத்தியண்டத்துத் தேவதேவி, சிவ அண்டத்துத் தாத்தா, உக அற நாயகி, தாத்தா இறுதி, தாத்தா பாதாள ஐயனார், தாத்தா இயந்திர மனிதர், அண்டபேரண்ட அருட்போரில் ஈடுபட்டிருக்கும் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி முதல் இம் மண்ணுலகிலுள்ள மீதிப்பத்துப் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் ஆகிய அனைவரின் ஒப்புதலையும் பெற்று அருட்கொடையாக வழங்க முன்வந்துள்ளார், தமது 54 வது வயதில்'' என்று இவருடைய குருபாரம் பரியத்தின் வாசகம் பொறிக்கப்படும் சிறப்பு உருவாகிறது இந்த வெளியீட்டால்.

2. இந்தச் சத்தி மாந்தரம் குருபாரம்பரியத்தில் பத்தி சத்தி சித்தி முக்தித் தேவி உயிர்ப்பு மாந்தரம் என்று குறிக்கப்படுகிறது. ஏற்கனவே சத்தி காயந்திரி மந்தரம், சத்தி காயந்திரி மந்திரம் எனும் இரண்டும் வெளியிடப்பட்டுள்ளன. விரைவில் சத்தி மந்திறம் என்பதும், சத்தி மாந்தரம், சத்தி மாந்தரீகம் என்பவை -யும் எழுதப்பட்டு அருட்கொடையாக வழங்கப்பட இருக்கின்றன. அதற்காக அனைவரும் தங்கள் பூசையில் வேண்டுங்கள்.

3 அண்மையில், கடந்த மூன்று உகங்களையும் சார்ந்தவர்கள் அருட்போரின் கன்னிப் போரை நெடுங்காலமாகத் தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டு வருவது எதிர்பாராமல் கண்டுபிடிக்கப்பட்டு அருளாட்சி நாயகமும் அருட்போரைத் துவக்கி விட்டார் என்பதால்தான்; மெய்யான வாய்மைநிறை குருபத்தியுள்ளவர்களைச் சத்தி சித்தி பெற்று அருட்போரில் பங்கு பெறச் செய்வதற்காகத் தம்மிரு பாதங்களிலிருந்து குருதி கொட்டி அனைத்துவகையான பூசைகளையும் செய்து ஈசுவரி காயந்திரி மந்தரம் மந்திரம், மந்திறம் எனும் மூன்றுமே வெளி

-யிடப்படுகின்றன என்பதை அனைவரும் நினைவிற் கொள்ள வேண்டும். மேலும், குருதேவரால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருளி விளக்கப்படுபவர்களுக்கு மட்டுமே இவை சித்தியாகிடும். அதனால், அனைவரும் அன்றாடம் எல்லாப் பூசைகளையும் தவறாமல் செய்யுங்கள் என்று தலைமைப் பீடத்திலிருந்து அருளார்ந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

**பதினெண் சித்தர் மடம், பதினெண் சித்தர் பீடம்**

# இ. ம. இ. யின் முதல் பயிற்சி முகாம்

## திருவரங்கம் (திருச்சி) மார்ச்சு 4, 5, 6–3–1988

திருவரங்கத்தில் (திருச்சி) பிறவாக ஆண்டு இந்துமத ஆண்டான 4373089, இல் மாசி மாதத்தில் 21, 22, 23 இந்த மூன்று நாட்களில்; இருநூறு ஆண்டு-களுக்கும் மேலாக இருந்து வரும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின்; 'இலைமறை-காயான செயல்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி; உலகறிய 20,000 அறிக்கை-களுக்கும் மேலாக அச்சிட்டும், எல்லாவகையான நாளேடுகள், வார இதழ்கள், மாத மலர்கள் என அனைத்துக்கும் அறிவிக்கைகளை வழங்கி விட்டும் முதல் பயிற்சி முகாம் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. இதில், பல நூறாயிரக்கணக்கானவர்கள் தனிப்பட்ட முறையில் எம்மை, 'எல்லாம் வல்ல சித்தர்', 'தத்துவ நாயகம்', குவலய குருபீடம் 'இந்துமதத்தந்தை', 'இந்து மதஆச்சாறியார்', 'தமிழின ஆச்சாறியார்', நிறையக்னர்', 'கருவறை மூலவர்களின் 'அம்மையப்பர்', 'அண்டபேரண்ட ஆதி சத்திகள் சன்னிதானம்', 'அருளாட்சி நாயகம்' 'குருமகா சன்னிதானம்', ஞானச்சாரியார்'. 'ஞாலகுருசித்தர் அரசயோகிக் கருவூரர்', 'நான்குயுகநாயகம்', 'பரபிறம்மம்', 'பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி'... என்ற முறையில் தெரிந்தும், அறிந்தும், ஆராய்ந்தும், புரிந்தும், தெளிந்தும், உணர்ந்தும், நம்பியும், ஒப்புக் கொண்டும், விரும்பியும் உலக அளவில் செயல்பட்டிருந்தும் கூட; பயிற்சிக் குரியவர்கள் மட்டுமே அருள் உலகத்தவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்-பட்டார்கள். இங்கு அவர்கள் எண்பத்தாறு பேர்கள்தான் என்பதைக் குறித்து கொள்ள விரும்புகிறோம் யாம். இருப்பினும் இந்த எண்பத்தாறு பேர்களிலும் உரிய பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றவர்கள் பத்தொன்பது பேர்கள் தான். அதிலும் ஒருவர் வாழ்த்துப் பெற்று முழுமையடையாமல் போய்விட்டது. எனவே, அருள் உலகத்-தவர்கள் அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்களின் தாய்மொழியான அமுதத் தமிழ்மொழி வழியாக. இம்மண்ணுலகுக்கு இளமுறியாக் கண்டத்தில் வழங்கிய இந்துமதத்தின் அடிப்படையான தெய்வீக எண்ணிக்கையான பதினெட்டு என்ற எண்ணிக்கைக்கு ஏற்பவே இந்த பயிற்சி முகாமில் பதினெட்டு பேர்களைத் தேர்ச்சிக்-குரியவர்களாக்கியுள்ளார்கள். சற்றும் எதிர்பாராமல் அருளுலகத்தவரால்தான் இப்படி நியமிக்கப்பட்டது என்ற பேருண்மையை இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்கள் உணர்வர்.

இவற்றால், யாம் அருளாட்சி அமைக்கப்போவது உறுதி என்பதும். அதற்-காக வானவர், விண்ணவர், விசும்பவர், ஆகாயத்தவர், ககனத்தவர்," பரவெளி-யினர், பாழ்வெளியினர், எனும் ஏழு மேல் உலகத்தவரும், கீழே உள்ள ஏழு பாதாள உலகத்தவரும் (இவற்றின் பெயர்கள் இரகசியமாகக் காக்கப்படுகின்றன) மிகத் தெளிவாகவும், வலிவாகவும், வளமாகவும் எமது அருளாட்சிப் பணிக்கு எல்லா வகையான உதவிகளையும் எப்போதும் உடனிருந்து தலைமை தாங்கி வழங்கிடுவார் வார்கள்! வழங்கிடுவார்கள்! வழங்கிடுவார்கள்! என்ற பேருண்மை தெளிவாகத் தெரிகிறது இந்த முதல் பயிற்சி முகாமின் மூலம்.

1988-ஆம் ஆண்டிற்கான குருதேவர் சந்தா ரூ 36/- செலுத்தி விட்டீர்களா?

இப்படியாக இந்தப் பயிற்சி முகாம் மிகப் பெரிய அரிய கூரிய சீரிய நேரிய வெற்றியினைப்பெற்றிருக்கின்றது என்றுயாம் உணர்த்தாமலேயே அனைவரும் உணர்ந்திருக்கின்றார்கள் என்றாலும்; யாம் இந்த 49-வது குருதேவர் அறிக்கையை **'இந்து மறுமலர்ச்சி இயக்கப் பயிற்சி முகாமின் சிறப்பு மலராக'** வெளியிடுவதால் இப்படித் தெளிவாக எழுத்து மூலம் அறிவிக்கப்படுகின்றது. எனவே, நம்மவர்கள் ஏற்கனவே யாம் வெளியிட்டுள்ள 48 குருதேவர் அறிக்கைகளையும், சுமார் பத்து பன்னிரண்டு சிறிய, பெரிய புத்தகங்களையும் ஆயுதங்களாகக் கொண்டு அருட்போருக்குரிய பயிற்சிகளைப் பெற்றும், பிறருக்குக் கற்றுக் கொடுத்தும் வளர்ந்திட்ட பதினாறு ஆண்டுக்கால வெற்றிச் சாதனைகள்தான் இந்தப் பயிற்சி முகாமின் சாதனைகள். எனவே தான், இந்த வெற்றியினை இம்மலர்வெளியீட்டின் மூலம் சிறப்பாகக் கொண்டாடுகிறோம் யாம். இந்த வெற்றி மிகச் சாதாரண வெற்றியல்ல; அண்ட பேரண்டத்தவர் எல்லோருமே ஏற்றுப் போற்றிடும் ஒருமாபெரும் வெற்றியே யாகும் இது.

இந்தப் பயிற்சி முகாமில் முறையாக உலகச் சுடுகாடுகளின் தலைவியான திருச்சி ஓயாமெரிச் சுடலைப்பத்திரகாளி திருமுன்னர் ஐந்தீ வேட்டலும், முத்தீ ஓம்பலும் செய்யப்பட்டன. ஓயாமெரிக்குரிய சுடலைப் பத்திரகாளி, பத்திரகாளி, பத்தரகாளி, சுடலை ஈசுவரி, சுடலைப் ஆண்டிச்சி எனும் ஐவரோடும்; ஆலவாய் மாமூதூர் மதுரைத் தத்தனேரி சுடலை பத்திரகாளி, பத்திரகாளி, பத்தரகாளி, சுடலை ஈசுவரி, சுடலை ஆண்டிச்சி எனும் ஐவரோடும் ஆகப்பத்துபேர்களும் தலைமையேற்று இறுதிவரை இருந்து பயிற்சி முகாமினை வெற்றியாக்கித் தந்தார்கள்.

இந்தச் சுடுகாட்டுப் பூசையில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள் ......என வயது வித்தியாசமின்றி இயக்கத்தவர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டார்கள். சைவ மதம், வைணவ மதம் என்ற வேறுபாடில்லை என்பதற்காகச் சிவலிங்கக் கொடியும், மயிற்பீலியும், திரிசூலமும் ஏந்திய நாம்; திருவரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் மாயோனை வலம் வந்து திருவரங்கத்தில் அவன் திருமுன்னரே மூன்று நாட்கள் பயிற்சி தந்தோம். நமது முதன்மையான பயன்மிக்க சிறப்பு நிகழ்ச்சிகள் அனைத்தையும் இருநூற்றுக்கும் மேலாக வண்ணப் புகைப்படம் எடுத்தோம். அவை யாவும் பூசைக்குரியனவே! எனவே, தேவையானவர்கள் எம்மூலமோ, மதுரை திரு. N.S சாமிநாதன் மூலமோ தொடர்பு கொண்டு அந்தப் புகைபபடங்களைப் பெற்றுப் பூசையறையில் வைத்துக் கொள்ள வேண்டுகிறோம். பயிற்சி முகாமில் வழங்கிய சான்றிதழ்களையும், பூசைக்குரிய குருதேவர் படத்தையும் அன்றாடம் ஒரு முறையாவது தொட்டு அவரவர் தங்களுடைய அருட்பட்டங்களைக் கூறி அருளுலக அறிமுகங்களைப் பெற்று பத்தி, சத்தி, சித்தி, முத்திகளில் தேர்ச்சி பெற்றுக் கொள்ளலாம்.

இந்தப் பயிற்சி முகாமில் நாள் குறைவாக இருந்ததாலும்; நள்ளிரவுப் பூசைகளும், கொள்ளிடத்துப் பூசைகளும், சுடுகாட்டுப் பூசைகளும் அதிக நேரத்தைப் பிடித்துக் கொண்டதாலும்; பயிற்சியாளர்களுக்கு வழங்குவதற்காகத் தயாரிக்கப் பட்டிருந்த பல கட்டுரைகள், குறிப்புகள், ஒகாசன யோகாசனப் பயிற்சிகள், சேவலோன்கலைகள், இட்டும் தொட்டும் சுட்டியும் பக்குவமுள்ளோருக்கு அருள்வழங்குதல், உரியவர்களுக்குச் சித்திப் பூசை வழங்கல், பதினெண் சித்தர்களின் பாரம்பரியத்தில் சேராதவர்களும் அனுபவிப்பதற்காகப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, நான்குயுக நாயகத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'ஞானக்காட்சி', 'அருட்கணிப்பு', 'அருள்வாக்கு', 'அருள் வழங்கல்'. 'பழம்பிறப்பு உணர்தல்', 'மறு பிறப்புணர்தல்', 'தோற்ற மாற்றச்சித்தி', 'அத்திறங்களை ஏவுதல்', 'கடவுள் என்ற பொதுச் சொல்லால் குறிக்கப்படும் 48வகை வழிபடுநிலையினர்களையும் புறக்கண்ணால் பார்த்தல்', உருவ மாற்றம்', 'ககனமார்க்கப் பயணம்', 'அருவுருவம் பெறுதல்',

---

'ஆவி, ஆன்மா, ஆருயிர், பிரித்தறிதலும், உணர்தலும்;' 'குருவழிச் சேரல்',...... ஆகியன பயிற்றுவித்தல் முதலியவற்றில் சிலவற்றைக் கூடப் பயிற்சியாக வழங்க முடியவில்லை; வருந்துகின்றோம். எனவேதான், இந்தப் பயிற்சி முகாம் சிறப்புமலரில் **'பயிற்சி முகாமில் சொல்லாமல் விடப்பட்டவை'** என்ற தலைப்பில் தலைமைப் பொறுப்பாளர் கட்டுரை வரைந்துள்ளார்.

அன்பு / குருதேவர்

---

6-ம் பக்கம் தொடர்ச்சி

தலைமையேற்று நேரடிப்போரில் ஈடுபட்டுத் தம் துணைவியாரோடும், பல்லவ இளவரசி -களோடும் தேரேறி விண்ணுலகில் பயணப்பட்டிருக்கும் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களின் ஒப்புதலையே எதிர்பார்த்துக் காத்திருந்தார். ஆனால். அவர் எதிர்பார்த்ததை விட அளவுக்கதிகமான பாராட்டுதலும், ஒப்புதலும் கிடைத்தது. ஏனெனில், தான், இதுகாறும் வெற்றி கொண்ட 108 திருப்பதி அண்டங்களுக்கும், தான வெற்றி பெற்றுக் கொண்டிருக்கும் 243 சத்தி அண்டங்களுக்கும், இனிமேல் அதிக எதிர்ப்பே இல்லாமல் கோலாகலமாக வெற்றி பெறப்போகும் 1008 சிவாலய அண்டங்களுக்கும் மிகுந்த பூரிப்போடும், பெருமிதத்தோடும், "தன்னுடைய பேரன், தான் முதல் அரசயோகி, முதல் அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்.. ... என்ற சாதனையாளனாக இருப்பதற்கு; 'பரபிறம்மம்' என்ற அருட்பட்டத்தை அருளுலகத்தவர்களே வழங்குகின்ற அளவுக்கு வெளியே சொன்னாலோ, எழுதிக் காட்டினாலோ, உணர்வால் பிறருக்கு வழங்கினாலோ கூடத் தலைசுக்குநூறாக வெடித்து விடும் என்று சொல்லப்படும் உயிர்ப்புக்குரிய சத்தி மாந்தரத்தைத் தகுதியுள்ளவர்கள் வந்து படித்து படித்துக் கொள்ளுங்கள் என்று பதினெண்சித்தர் மடத்தில் துணிவாக வைத்து விட்டான். இதற்கு மேலாக இவன், அருளுலக வறுமைகளையும், வெறுமைகளையும், இல்லாமைகளையும், இயலாமைகளையும், தெரியாமை -களையும், புரியாமைகளையும், இருள்களையும், இடர்களையும், நலிவுகளையும், மெலிவு -களையும், தளர்ச்சிகளையும், அயர்ச்சிகளையும் போக்கக்கூடிய அரிய பெரிய சாதன -மான, போராயுதமான, மிகுந்த வலிமையுடைய அத்திறமான புத்துயிர்ப்புக்குரிய சத்திமாந்தரீகத்தையும் எழுதத் துவங்கி விட்டான்.

இதிலும் அவன் முழு வெற்றி பெறுவான். இவன் இப்படித் தன்னை 'இந்து மதத் தந்தை', 'குவலய குருபீடம்', 'அருளாட்சி நாயகம்', 'தத்துவநாயகம்', 'நிறையக்ஞர்', 'கருவறை மூலவர்களின் அம்மையப்பர்' என்ற பட்டங்களுக்கு எல்லாம் உரியவன் என்பதை மெய்ப்பித்து விட்டான், மெய்ப்பித்து விட்டான். மெய்ப்பித்து விட்டான். இனியும் அண்டபேரண்டத்தவர்கள், அவன் தனது திறமை -யாலும், போர் வியூகச் சூழ்ச்சிகளாலும், குருபாரம்பரியத்தில் உள்ள மறைவான குறுக்கு வழி முறைகளாலும் இதுவரை எந்தப் பீடாதிபதியும் பெற்றிடாத, எவரும் பெறமுடியாத அண்டபேரண்ட ஆதி சத்திகள் சன்னிதானத்துக்குரிய அருட்போரினை நேரடி அறிவிப்பின்றியும், முறையான போரின்றியும் நிகழ்த்தி மாபெரும் வெற்றி யைப் பெற்றிட்டான் என்றாலும்; விரைவில் அவனது வெற்றியை அனைவரும் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். இல்லையேல், எமது போரை மிகவும் கடுமையாகவும், கொடுமையாகவும் நிகழ்த்த நேரிட்டிடும்......" — என்றிப்படிப் பலவாறு மகிழ்ச்சி அறிவிப்புக்களை அறிவித்தவாறு; ஆயாள் தாய்லாந்து நாட்டு இளவரசி பொன்னிறப் பாவை அவர்கள் தமது பேரனின் அருளாட்சி அமைப்புப் பணியில் உதவி செய்யத் தேவதேவியையும், அருட்போருக்காக உகஅற நாயகியையும் அனுப்பியதை மிகவும்

---

1988-ஆம் ஆண்டிற்கான குருதேவர் சந்தா ரூ 36/- செலுத்திவிட்டீர்களா?

பாராட்டி ஏற்றுக் கொண்டார். அத்துடன் அருட்போரை முன்னிட்டு தமது பேரன் எடுத்து வரக்கூடிய வேகமான விரைவானமுயற்சிகளால் ஏதேனும் ஆபத்துஏற்படாமல் தடுக்கத் தனதுபேரனிடம்ஏதும்கூறாமல் அனுப்பியசிவாலய அண்டத்துத்தாத்தாவைத் தமது பேரனுக்கு எல்லா வகையான துணையையும், உதவிகளையும், செயல்திட்ட விளக்கங்களையும், செயல் சித்தாந்த விளக்கங்களையும விளக்குமாறு ஆணையிட்டிட்டார் இதுதான், '**பரபிறம்மம்**' என்ற அருட்பட்டம் பெற்றதற்குக் குருதேவருக்குக் கிடைத்திட்ட மிகப்பெரிய பரிசாகும். இனிமேல் எதற்கும் கவலையில்லை. விரைவில் சிவ அண்டத்துத் தாத்தா தனது செயல திட்டத்தையும் வரலாறுகளையும் கூறுவார். வாழ்வியல்களை விளக்கிடுவார். எனவே, கி.மு. 43 73, 101 ஆம் ஆண்டில் முதல் பீடாதிபதியான சிவபெருமான் முதனமுதல் இந்துமதப் பேரரசுகை மூடிசூட்டிக் கொண்டு அரியாசனத்தில் அமர்ந்து எழுதிய குருபாரம்பரியத்தில் மிகத் தெளிவாக 'பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி காலத்தில் விண்ணும் மண்ணும் இணைக்கப்படும், இணையும். அருளுலகப் பொருளுலக இருள்களும், இடர்களும் ஏக்கங்களும், முடக்கங்களும் பெருமளவில் தவிர்க்கப்படும்' என்று எழுதியுள்ள வாசகங்களும் இனி நிறைவேற்றும் என்பதில் ஐயமில்லை என்ற மகிழ்ச்சியோடு இரவு 1-30 மணிக்கு நிறைவு செய்து விட்டு மிகுந்த களைப்பினுல் குருதேவர், தாம், எழுதி முடித்த உயிராப்புக்குரிய சத்தி மாந்தரத்தை வந்திருந்த அருளுலகத்தார் படிக்குமாறு தருப்பைப்புல்பாயில் வைத்துவிட்டுப் புதியதாக வாங்கிய கோரைப்புல்பாயில் படுத்தார். தம்மை மறந்து கண்ணயர்ந்து ஆழ்ந்த நித்திரையில் உறங்கி விட்டார். ஆனுல், குறிப்பிட்ட சிறிது நேரத்திற்குள்ளேயே அருளுலகத்தாரின் இசைக்கருவிகளும், வாத்தியங்களும் முழங்கிப் பேரொலி எழுப்பிட்டன. அவை அளவு கடந்த எல்லையை அடைந்தபோது, பல பதினெண்சித்தர் பீடாதிபதி தாத்தாக்கள் வந்து குருதேவரைத் தட்டி எழுப்பினுர்கள். அப்போது, செவ்வாய்க்கிழமை பிறந்து (22-3-88) இரண்டரை மணி நேரம் ஆகியிருந்ததைத் தலைமாட்டிலிருந்த கடிகாரம் மூலம் அறிந்து பூசையறைக்குள் எழுந்து சென்ருர் குருதேவர். அங்கிருந்த அனைவரும் குருதேவரை முறைப்படி பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடத்தில் தருப்பைப் புல் பாயை விரித்து அதன மீது குருதிவண்ணச் செவ்வாடை விரித்து (ஏற்கனவே விரித்திருந்த முறை தவருனது. அவசரத்தில் விரிக்கப்பட்டிருந்தது) அதன் மீது குருதேவரை அமரச் செய்து வாழ்த்தினுர்கள். ஏறத்தாழ எல்லோருமே குருதேவரை 'எல்லாம் வலல சித்தர்' என்று அழைத்துப் பாராட்டினுர்கள். இந்தப் பட்டம் ஏற்கனவே குருதேவருக்குரிய பட்டம்தான். அதாவது, 1954-56இல் ஆலவாய் மாமூதூர் மதுரைத் தத்தனேரியில் குருதேவர் அரசயோகம் செய்த காலத்தில் மதுரை மீனுட்சியம்மன் ஆலயத்தில் சொக்கநாதர் சன்னதிக்குப்பின்புறத்தில் உள்ள சுந்தரானந்தர் சமாதிக்கு அருகில் சொக்கநாதரின் கோபுரத்தைத் தாங்கி நிற்கக் கூடிய வெள்ளையானைச் சிலைக்கு (இது கல்லால் ஆனது; முன் இரு கால்களும், தலைப்பகுதியும் மட்டுமே இருக்கும்) தமது தந்தையாரின் வேண்டுகோளின்படித் தமது அரசயோகத்திற்குப் பேருதவி புரிந்த வள்ளல்கள் காண; சமயக்குரவர்களுள் ஒருவரான அப்பர் எனப்படும் திருநாவுக்கரசர் கல்யானைக்குக் கரும்பு கொடுத்து உண்ணச் செய்தது போல் குருதேவரும் வாழையிலையில் வாங்கி வரப்பட்ட சர்க்கரைப் பொங்கலை உண்ணச் செய்து மாபெரும் சித்து விளையாடலைச் செய்தார். அப்போது சித்தர் சுந்தரானந்தர் முதல் வடக்கு வாசல் அருகிலுள்ள தாத்தா செம்பருத்திப் பிள்ளை, ஏழு பருவத்து மீனுட்சிகள், எழு பருவத்து ஆலவாய் அழகிகள், ஏழு பருவத்து அங்கயற் கண்ணிகள், ஏழு பருவத்து அங்கயற்கன்னிகள், பல மீனுட்சி சுந்தரேசுவரர்கள், பல அங்கயற் கண்ணேசுவரர்கள், பல அங்கயற் கண்ணேசுவரிகள், பல அங்கயற் கன்னீசுவரர்கள், அங்கயற் கன்னீசுவரிகள், ஆலவாய் அழகன்கள், அழகிகள், தாத்தா மதுரைப்பாண்டி முனீசுவரர், தாத்தா மதுரை மொட்டைக் கோபுரத்து முனீசுவரர், தாத்தா புதுக்கோட்டை பொற்பனையான் கோட்டை

1988-ம் ஆண்டிற்கான குருதேவர் சந்தா ரூ. 36/- செலுத்தி விட்டீர்களா?

முனீசுவரர், தாத்தா திருவரங்கத்து மொட்டைக் கோபுரத்து முனீசுவரர், தாத்தா கரூர் நாட்ராயர், தாத்தா மந்திர மகாமுனி தாத்தா கோச்சடை முனீசுவரர், ஆத்தாள் வீரப்பூர் பெரிய காண்டியம்மன்... முதலியோர்களும் மற்றவர்களும் 'எல்லாம் வல்ல சித்தர்' என்று பாராட்டினார்கள். இந்தப் பாராட்டுக்குரிய அருட்பட்டம் சித்து விளையாடலால் வந்தால் தான் நமது குரு-தேவர் இதனை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. யாருக்கும் தெரிவிப்பதுமில்லை. ஆனால், இப்போதோ, தமக்குக் கிடைத்த அருட்கொடைவள்ளல் என்ற பட்டத்துக்கேற்பவும், இந்து மதத் தந்தை, அருளாட்சி நாயகம், குவலய குருபீடம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர்... முதலிய பட்டங்களுக்கேற்பவும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளில் றிப் பிறர் அறியமுடியாத, அறியக் கூடாத உயிர்ப்புக்குரிய சத்தி மாந்தரத்தை எழுதி முடித்து அருளுலகத்-திலும் பொருளுலகத்திலும் தகுதியுள்ளவர்கள் தெரிந்து கொள்ளட்டும் என்ற அரிய பெரிய சாதனைக்காக 22-3-88 செவ்வாய்க்கிழமை அதிகாலை 2-30 மணி முதல் 3-10 மணிவரை குருதேவரைப் பாராட்டி அருளுலகத்தவர்களும், பொருளு-லகத்தவர்களும் தங்களின் நெஞ்சம் நிறைந்து சிந்தை நிறைந்து வாயார 'பரபிறம்மம்' என்று பட்டம் தந்து வாழ்த்தியதோடு; ஏற்கனவே குருதேவர் 1954-56 இல் வாங்கிய 'எல்லாம் வல்ல சித்தர்' என்ற அருட்பட்டத்தால் அழைத்தார்கள் என்பதால் அந்த அருட்பட்டத்தையும் அனைவருக்கும் அறிவிக்கின்றார். எனவே, நம்மவர்கள் நமது குருதேவர் 'பரபிறம்மாகவும்', எல்லாம் வல்ல சித்தராகவும் தேர்ச்சியுற்று உயர்ச்சி பெற்றிருப்பதைத் தங்களுடைய அன்-றாடப் பூசையில் அறிவித்துப் பூசை செய்யுமாறு அறிவிக்கப்படுகின்றார்கள்.

நமது குருதேவர் 22-3-88 அதிகாலை 3-10 மணி முதல் 'எல்லாம் வல்ல சித்தராகவும்', 'பரபிறம்மாகவும் நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமர்ந்து அருள் வழங்கி அனைவரையுமே பத்தி சத்தி சித்தி முத்திகளில் தேர்ச்சி பெற்றவர்களாக்கிட உறுதி பூண்டுள்ளார். எனவே. நம்மவர்களில் சன்னிதானப் பட்டம் பெற்றவர்கள் தங்களுடைய அருளுலக வளர்ச்சிக்காகவும், வலிமைச் செழிச்-சிக்காகவும், பயிற்சி முயற்சித் தேர்ச்சிகளுக்காகவும் ஓர் அமாவசை முதல் மறு அமாவாசை வரை அதாவது ஒரு மாதத்துக்குள் குருதேவரிடமிருந்து நேரடியாகவோ, அஞ்சல் மூலமாகவோ அருளூறு பூசனைப் பொருள் பெற்றேயாக வேண்டும். இதே போல், குருதேவரை நேடிரயாகத் தொட்டோ, அல்லது குருதேவர் தொட்டு அனுப்ப கூடிய பொருளைத் தொடுதல் அல்லது தொட்டுணர்தல் அல்லது தொட்டறிதல் என்ற முறையில் தங்களின் பயிற்சிகளை செய்ய வேண்டும். 'இதற்காகவே, நமது குருதேவர் அறிக்கை இந்த 1988 ஆம் ஆண்டு முதல் குருதேவரின் தொட்டு வாழ்த்துகளோடும், அருளூறு பூசனைப் பொருட்களோடும் மாதந்தோறும் வந்திடும்'— என்ற செயல் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, நம்மவர்கள் அனைவரும் விரைந்து 1988 ஆம் ஆண்டிற்கான 'குருதேவர்' அறிக்கைச் சந்தாவை அனுப்பி வைக்க மீவண்டும். அத்துடன் பலரையும் 'குரு-தேவர்' அறிக்கைச் சந்தாதாரர்களாக்கி, குருதேவர் மெய்தொட்டு வாழ்த்தி அனுப்பிய அறிக்கையையும், அருளூறு பூசனைப் பொருட்களையும் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.

சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நம்மவர்கள், நாம் பெரிதும் முயன்று கடந்த நான்கு ஆண்டுகளாக அச்சடித்துக் குவித்து வைத்துள்ள குருதேவர் அறிக்கைகளை தங்கள் தங்களால் முடிந்த அளவு விற்றுத்தர முன்வர வேண்டும். அப்பொழுதுதான் பொருளாதார நிலை வளப்படும், வலிமைப்படும். இவற்றையெல்லாம் சிந்திப்பீர்! செயல்படுத்துவீர்!

அருட்போரின் கன்னிப்போர் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தால்யாரும் தலைமைப் பீடத்திற்கு நேரில்வர அனுமதிக்கப்பட மாட்டார்கள் அதாவது, எல்லோருமே நமது இயக்கத்தின் தலைமைப் பொறுப்பாளரான அருள்மிகு அங்காள பரமேசுவரி சன்னிதானம், பிறமாச்சாரியார் சி, கவிக்குமார் அவர்களின் இல்லத்திற்கு வந்துதான் பூசைகளைச் செய்து கொள்ள வேண்டும். யாரேனும் எதிர்பாராமல் திடீரென்று சென்னை வந்தால் இரயில் நிலையத்திலிருந்து தொலைபேசி எண் 619994 மூலம் தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் வருகையை அறிவித்துத் தலைமைப் பீடத்தின் ஆணைப்படிச் செயல்படல் வேண்டும். இதுவே நமது இயக்கத்-தினர் அனைவருக்கும் பொதுவில் விடுக்கப்படும் குருவாணை, செயல்திட்டம்

பதினெண்சித்தர் மடம், பதினெண்சித்தர் பீடம்